|b09291 55mazzaF (English)

|c09291_000_55mazza.xml (Task 178071)

|v1

ஞாயிற்றுக் கிழமை மதியக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

 ஞாயிற்றுக் கிழமை மதியக் கூட்டம்

|v4

*அக்டோபர்  3, 2010*

|v5

பாவத்தின் பொறியைத் தவிர்த்தல்

|v6

பாவம்

|v7

மனந்திரும்புதல்

|v8

பொது மாநாடு

|v9

பாவத்தின் பொறியைத் தவிர்த்தல்

|v10

மூப்பர் ஜெய்ரோ மாசாகார்டி

|v11

எழுபதின்மர்

|v12

உறுதியாய் நின்று, ஜீவ விருட்சத்தின் கனியை நீங்கள் புசிக்க அனுமதிக்கிற நல்ல தேர்ந்தெடுப்புகளைச் செய்யுங்கள்.

|v13

ஒரு பிரகாசமான அழகிய காலையில், எங்கள் அழகிய நகருக்கு, உண்மையாகவே நீர்த்தேக்கமாயிருக்கிற ஏரியின் அருகில் என்னுடன் நடக்க கிட்டத்தட்ட எட்டு வயதாகிற எனது பேத்தி விக்கியை அழைத்தேன்.

|v14

எங்கள் பாதையோடு ஓடிய கண்ணாடி போன்ற தெளிவான நீரோடையின் மென்மையான ஓசையைக் கேட்டுக் கொண்டே நாங்கள் மகிழ்ச்சியுடன் நடந்தோம். அழகிய பசுமையான மரங்களாலும் நறுமணமிக்க மலர்களாலும் அந்த பாதை நிரம்பியிருந்தது. பறவைகளின் பாடலை எங்களால் கேட்க முடிந்தது,

|v15

அவள் எவ்வாறு தன் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகிறாள் என எனது நீலக் கண்ணுடைய, மகிழ்ச்சியான, வெகுளியான பேத்தியைக் கேட்டேன்.

|v16

அவள் ஒரு கேள்வியுடன் பதிலளித்தாள்: “தாத்தா, பாவம் என்றால் என்ன?”

|v17

நான் மவுனமாக உணர்த்துதலுக்காக ஜெபித்து என்னால் இயன்றவரை எளிமையாக பதில் சொல்ல முயற்சித்தேன்: “பாவம் என்பது தேவனுடைய கட்டளைகளுக்கு தெரிந்தே கீழ்ப்படியாமலிருப்பதாகும். அது பரலோகப் பிதாவை சோகமடையச் செய்யும், அதன் விளைவுகள் பாடுகளும் சோகமும் ஆகும்.”

|v18

தெளிவான அக்கறையுடன் அவள் என்னைக் கேட்டாள், “அது எவ்வாறு நம்மை பிடிக்கிறது?”

|v19

அக்கேள்வி முதலாவது தூய்மையை தெரிவிக்கிறது, ஆனால் அது பாவத்தில் ஈடுபடாமல்
எவ்வாறு தவிர்ப்பது என்ற அக்கறையையும் தெரிவிக்கிறது.

|v20

அவள் மிகத் தெளிவாக புரிந்து கொள்ளுமாறு விளக்குவதற்காக நம்மைச் சுற்றியுள்ள இய
ற்கைப் பொருட்களை உபயோகித்தேன். எங்கள் பாதையில் தொடர்ந்து சென்று, முள்வே
லியின் அருகில் ஒரு பெரிய கல் தூணை கண்டோம்; பூக்களும், புதர்களும், சிறு மரங்க
ளும் அதைச் சுற்றி வளர்ந்திருந்த ஒரு பலமான கட்டுமானம் அது. சிறிதுகாலத்தில் அச்செ
டிகள் தூணை விட பெரிதாகும்.

|v21

பாதையில் மேலும் சிறிது தூரத்தில் அதைச் சுற்றி வளர்ந்த தாவரங்களால் சிறிது சிறிதாக,
கவனிக்கப்படாமல் அதை சூழ்ந்து கொண்ட மற்றொரு தூணையும் கண்டதை நினைவு
கூர்ந்தேன். அதற்கு பலமிருந்தும் கூட அச்சிறிய செடிகளால் மூடப்பட்டு அழிக்கப்பட
லாம் என்பதை அந்த தூண் எதிர்பார்த்திருக்க முடியாது என நான் கற்பனை செய்து கொ
ண்டேன். அந்த தூண் நினைத்திருக்கலாம், “பரவாயில்லை. நான் பலமானவன், பெரியவ
ன் இந்தச் சிறிய செடி எனக்கு கேடு செய்ய முடியாது.”

|v22

எனவே அருகிலிருந்த மரம் பெரிதாக வளர்ந்ததை முதலில் அந்தத் தூண் கவனிப்பதில்
லை; பின்பு, அந்தத் தூண் அந்த மரம் கொடுக்கிற நிழலை அனுபவிக்கத் தொடங்குகிறது
. ஆனால் அந்த மரம் தொடர்ந்து வளர்ந்து, முதலில் சிறிதாக தோன்றிய இரண்டு கிளைக
ளால் சூழ்ந்து கொள்கிறது, ஆனால் அது காலப்போக்கில் தூணைச் சுற்றி சூழ்ந்து கொள்
கிறது

|v23

இன்னும் அந்தத் தூண் என்ன நடக்கிறது என்பதை உணரவில்லை.

|v24

உடனே, நாங்கள் நடந்து கொண்டிருந்தபொழுது அந்தத் தூணை நாங்கள் கண்டோம்.
அது தரையிலிருந்து பிடுங்கப்பட்டிருந்தது. என் பேத்தி அதனால் கவரப்பட்டு என்னைக்
கேட்டாள், “தாத்தா, இது தான் பாவத்தின் மரமா?”

|v25

பாவம் நம்மை எப்படி பிடிக்கிறது என்பதன் ஒரு அடையாளம் அல்லது உதாரணம் இது
என நான் அவளுக்கு விளக்கினேன்.

|v26

*எங்கள் உரையாடல் அவளிடம் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என எனக்குத் தெரியாது, ஆனால் பாவத்தின் பல பரிமாணங்களைப்பற்றியும் நாம் அனுமதித்தால் நமது வாழ்க்கையில் அது எவ்வாறு ஊடுருவுகிறது எனவும் என்னை யோசிக்கச் செய்தது.*

|v27

*சீக்கிரம் படுக்கைக்குச் செல்வது, சீக்கிரம் எழுந்து கொள்வது போன்ற சிறு தேர்ந்தெடுப்பினால் கூட பயங்கர விளைவுகள் உண்டு என்பதால் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். கோட்பாடும் உடன்படிக்கைகளும் 88:124 நமக்குப் போதிப்பதாவது, "உங்கள் சரீரங்களும் மனங்களும் புத்துணர்ச்சிப் பெறும்படியாக சீக்கிரம் எழுந்திருங்கள்." சீக்கிரத்தில் படுக்கைக்குச் செல்பவர்கள் ஒய்வெடுத்து எழுந்திருந்து சரீரமும் மனமும் புத்துணர்சி பெற்று, கீழ்ப்படிவதன் நிமித்தம் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.*

|v28

*தாமதமாக படுக்கைக்குச் செல்வது, ஒருநாள் ஜெபிக்காமலிருப்பது, உபவாசிக்காமலிருப்பது, ஓய்வுநாளை மீறுவது போன்ற முக்கியத்துவம் குறைந்ததாக தெரிகிற இச்சிறு பிழைகள், நாம் கெட்ட காரியங்களை சிறிது சிறிதாக செய்ய அனுமதித்து நாம் உணர்வோடு இருப்பதை இழக்கச் செய்யும்*

|v29

*நான் குமரப் பருவத்திலிருந்தபோது, வீட்டுக்கு வந்துவிடவேண்டுமென்ற நேரம் இரவு 10.00 மணி. இன்று, கேளிக்கைகளுக்காக சிலர் வெளியில் செல்லும் நேரம் அது. எனினும் சில மோசமான செயல்கள் இரவில் தான் நடக்கின்றன என நாம் அறிவோம், இருட்டு நேரத்தின்போது, சில இளைஞர்கள் பொருத்தமற்ற சூழ்நிலையிலிருக்கிற இடங்களுக்குச் செல்கிறார்கள். அங்கு பாடலும் இசையும் பரிசுத்த ஆவியானரின் தோழமையை அனுமதிப்பதில்லை. பின்பு, இந்தச் சூழ்நிலைகளில் அவர்கள் பாவத்துக்கு எளிதில் இரையாகிறார்கள்.*

|v30

*அடிக்கடி பாவத்துக்கு இரையாதல், சுவிசேஷத்துக்கு ஒத்துவராத தரங்களையுடைய நண்பர்களை ஒருவர் தேர்ந்தெடுப்பதாலும், நண்பர்களால் ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது பிரபலமடையவோ அவர் சுவிசேஷக் கொள்கைகளையும் நியாயப் பிரமாணங்களையும் சமரசம் செய்து கொண்டு அவருக்கும் அவரை நேசிப்பவர்களுக்கும் வேதனையையும் சோகத்தையும் கொடுக்கக்கூடிய பாதையில் செல்வதில் தொடங்குகிறது.*

|v31

*பாவம் நம்மைச் சுற்றி வளர அனுமதிக்காதவாறு நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒரு கணிப்பொறியிலோ அல்லது கைபேசியிலோ, எங்கு வேண்டுமானாலும் பாவத்தின் தோற்றங்கள் இருக்கலாம். இந்த தொழில் நுட்பங்கள் பயனுள்ளவை நமக்கு அதிக பலன் தருபவை. ஆனால் நேரத்தை வீணாக்கும் விளையாட்டுக்கள் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது அல்லது ஆபாசப்படம் போன்ற சிற்றின்பத்திற்கு நடத்தும் மோசமான காரியங்கள் போன்ற அவற்றின் பொருத்தமற்ற பயன்பாடு அழிவுக்கேதுவானவை. ஆபாசம் நன்னடத்தையை அழித்து, அசிங்கமான புதைகுழியில் மூழ்கடிக்கும், அதிலிருந்து அவர்*

மிகுந்த உதவியினால் மட்டுமே தப்ப முடியும்.

|v32

அதைப் பயன்படுத்துவோருக்கும், அவரது ஒன்றுமறியாத பிள்ளைகளுக்கும், துணைவருக்கும், அப்பா, அம்மா மற்றும் பிற அன்புக்குரியவர்களுக்கும் இந்த கொடிய அரக்கன் வேதனையையும் பாடுகளையும் ஏற்படுத்தும். சிற்றின்பத்தின் கனி கசப்பும் சோகமுமே. கீழ்ப்படிதலின் தியாகத்தின் கனியோ தித்திப்பும் நித்திய சந்தோஷமுமாகும்.

|v33

பின்பற்ற வேண்டிய தரங்களைப்பற்றிய முடிவுகள் முன்னதாகவே எடுக்கப்பட வேண்டும் , சோதனை வரும்போது அல்ல. நமது அளவுகோல்கள்:

|v34

•

|v35

இது சரியானதென்பதால் இதைச் செய்வேன், இது கர்த்தரிடத்திலிருந்து வருகிறது, இது எனக்கு மகிழ்ச்சி தரும்.

|v36

•

|v37

விசுவாசமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் செய்கிற நித்திய மகிழ்ச்சியிலிருந்தும் கர்த்தரிடத்திலிருந்தும் சத்தியத்திலிருந்தும் என்னைப் புறம்பே இது இழுத்துச் செல்வதால் இதை நான் செய்ய மாட்டேன்.

|v38

நாம் தவறானவற்றைச் தேர்ந்தெடுப்போம் என பிதா அறிந்திருந்ததால், அவர், தனது அற்புதமான அன்பில் திட்டத்தில் மனந்திரும்புகிற எல்லோரின் பாவங்களுக்காகவும்; உதவியும், ஆறுதலும், மன்னிப்பும் தேடி அவரிடம் வருபவர்களுக்காகவும்; இயேசு கிறிஸ்து என்கிற அவரது நாமத்தை தம்மேல் எடுத்துக் கொள்கிறவர்களுக்காகவும், பாவநிவர்த்தி செய்கிற உலகத்தின் இரட்சகரை கொடுத்தார்.

|v39

நாம் பாவஞ்செய்தால், நாம் உடனடியே உதவி தேட வேண்டும், ஏனெனில் நாம் கூறிய அந்த வேலியிலிருந்த தூண் தானே தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதது போல, நாம் தனிமையில் பாவத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. அந்தக் கொடுமையான பிடியி

*லிருந்து விடுபட யாராவது ஒருவர் நமக்கு உதவ வேண்டும்.*

|v40

*பெற்றோர் உதவலாம், ஆயர் நமக்கு உதவ தேவனால் அழைக்கப்பட்டவர். அவரிடம் நாம் இதயத்தை திறந்து பேச வேண்டும்.*

|v41

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 58:42-43 விளக்குகிறது:*

|v42

*“இதோ, தன் பாவங்களுக்காக மனந்திரும்பியவன் மன்னிக்கப்படுகிறான், கர்த்தராகிய நானோ அதை ஒருபோதும் நினைத்திருப்பதில்லை.*

|v43

*“இதனிமித்தம் தன் பாவங்களுக்காக ஒருவன் மனந்திரும்பியதை நீங்கள் அறிந்தால், இதோ, அவன் அறிக்கையிட்டு விட்டுவிடுவான்.”*

|v44

*ஏரிக்கரையில் நாங்கள் நடந்த சில மாதங்களுக்குப் பின்பு, அவளது தகப்பனான ஆயரால் ஞானஸ்நானத்திற்காக எனது பேத்தி நேர்காணலுக்கு உட்பட்டாள். நேர்காணலுக்குப் பிறகு அது எப்படி இருந்தது என நான் அவளிடம் கேட்டேன். கிட்டத்தட்ட என்னைக் கடிந்து கொண்டு, அவள் பதிலளித்தாள், “தாத்தா, ஒரு நேர்காணல் இரகசியமானது. உங்களுக்குத் தெரியாதா?”*

|v45

*ஆயர்களே, அந்தப் பதிலை அற்பமாக எடுத்துக்கொள்ள மாட்டீர்கள்  என நம்புகிறேன். சிறிது காலத்திலேயே எனது பேத்தி புரிந்து கொள்வதில் மிகவும் வளர்ச்சியடைந்தாள் என எனக்குத் தெரிந்தது.*

|v46

*நான் விவரித்த மரம் சோகமும், வேதனையும், பாடும், சிக்கவைத்ததும்போல மற்றொரு மரம் அதன் எதிரானதை ஏற்படுத்தலாம். இது 1 நெப்பி 8:10--12ல் குறிப்பிடப்பட்டுள்ளது,*

|v47

*“மேலும் ஆனபடியால், நான் ஒரு விருட்சத்தைக் கண்டேன், அதன் கனி ஒருவரை மகிழ்விக்க கூடியதாய் இருந்தது.*

|v48

“மேலும் ஆனபடியால், நான் முன்பாகப் போய் அதிலிருந்த கனியைப் புசித்தேன்: நான் முன்னால் சுவைத்த எல்லாவற்றைக் காட்டிலும் அது மிக மதுரமாய் இருந்ததைக் கண்டேன். ஆம், அதிலிருந்த கனி வெண்மையாய், நான் என்றைக்கும் கண்டிராத எல்லா வெண்மையையும் மிஞ்சுவதாய் இருக்கக் கண்டேன்.

|v49

“ மேலும், நான் அதிலிருந்த கனியைப் புசித்த பொழுது, அது என் ஆத்துமாவை மிகுந்த அதிக மகிழ்ச்சியினால் நிறைத்தது;

|v50

அன்பான சகோதர சகோதரிகளே, உறுதியாய் நின்று, ஜீவ விருட்சத்தின் கனியை நீங்கள் புசிக்க அனுமதிக்கிற நல்ல தேர்ந்தெடுப்புகளைச் செய்யுங்கள். எந்த காரணத்திலாவது நீங்கள் தவறு செய்திருந்தால், அல்லது பாதையை விட்டு விலகியிருந்தால் எங்கள் கரங்கள் நீட்டப்பட்டிருக்கின்றன, உங்களுக்கு நாங்கள் சொல்கிறோம், “ வாருங்கள், நம்பிக்கையிருக்கிறது. நாங்கள் உங்களை நேசிக்கிறோம், நீங்கள் மகிழ்ச்சியாயிருக்க உதவி செய்ய விரும்புகிறோம்.

|v51

தன் ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்கு கொடுக்குமளவுக்கு பரலோகப் பிதா நம்மை நேசிக்கிறார்.

|v52

நமது பாவங்களுக்காக பாவநிவிர்த்தியினால் தன் ஜீவனை கொடுக்குமளவுக்கு இயேசு கிறிஸ்து நம்மை நேசிக்கிறார்.

|v53

பரிசுத்தமாக இருக்கவும் அந்த சந்தோஷத்தைப் பெறவும் நாம் எதைக் கொடுக்க சித்தமாயிருக்கிறோம்?

|v54

இந்த சத்தியங்களுடன் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினாலே என்னுடைய சாட்சியை கொடுக்கிறேன், ஆமென்.

|v55

லியஹோனா

*நவம்பர் 2010*